| O.S.No. 112/2023 | PW: 1திரு.சரன்ராஜ்<br>த/பெ. திரு. பாலகிருஷ்ணன் | 28-10-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1) என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சொத்தினை கிரையம் செய்து கொடுக்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். எனக்கும், பிரதிவாதியின் கணவருக்கும் சுமார் 5 வருடங்களாக பழக்கம். நான் TNPSC படித்துக்கொண்டே நகை தொழில் செய்து வருகிறேன். பிரதிவாதியின் கணவர் 10–15 வருடங்களாக சீட்டு நடத்தி வருகிறார் என்ற விஷயம் எனக்கு தெரியும் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கணவர் நடத்தும் அனைத்து சீட்டுகளிலும் நான் கலந்து கொள்வேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் நடத்தும் சீட்டில் நான் 2, 3 சீட்டுகளை கட்டுவேன் என்று சொன்னால் சரியல்ல.

2) நான் பிரதிவாதியின் கணவரிடம் சீட்டு எடுத்துவிட்டு தொகையை கட்டாமல் மற்றொரு சீட்டு போட்டு வருவேன் என்றால் சரியல்ல. ஜெயராம் ஆசிரியர் என் தாய்மாமா. எனது மாமாவும், பிரதிவாதியின் கணவரின் சீட்டு கட்டுவார் என்றால் அது எனக்கு தெரியாது. எனது சார்பாக எனது மாமா சீட்டு கட்டுவார் என்றாலும், எனது பினாமி எனது மாமா என்று சொன்னாலும் சரியல்ல. நானும், எனது மாமாவும் சீட்டு கட்டிய விஷயம் பிரதிவாதியின் கணவர் பராமரிக்கும் டைரியில் பதிவாகியுள்ளது என்றாலும், அதனை பிரதிவாதி தகுந்த நேரத்தில் நீதிமன்றத்திதல் சமர்ப்பிக்க தயாராக உள்ளார் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் கொரானா காலகட்டம் என்பதால் நான் அவரிடம் செலுத்திய சீட்டு தொகையை

எனக்கு அவரால் செலுத்த முடியாமல் போய்விட்டது என்று சொன்னால் சரியல்ல.

3) அந்த வகையில் பிரதிவாதியின் கணவர் ரூ.2,89,000/- எனக்கு பாக்கி தொகை தரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் பிரதிவாதி எனக்கு மேற்படி தொகைக்கு அடமானக்கடன் பத்திரம் பொறுப்புக்காக எழுதிக்கொடுக்கிறேன் என சொன்னார் என்றாலும், நான் கிரைய ஒப்பந்தமாக எழுதிக்கொடுக்க சொல்லி கேட்டதால் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தைப் பயன்படுத்திக் கொண்டும், படிப்பறிவு இல்லாத நிலையிலும் சீட்டு பாக்கி தொகைக்காக அவரை ஏமாற்றி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி எழுதி வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

4) பின்னர் பிரதிவாதியின் கணவர் 10.04.2021 தேதியில் ரூ.50,000/-மும் 08.04.2021 தேதியில் ரூ.50,000/-மும் 30.06.2021 தேதியில் ரூ.76,000/-மும் 23.11.2021 தேதியில் ரூ.21,400/-ம், 21.11.2021 தேதியில் ரூ.13,600/-மும் ஆக மொத்தம் ரூ.2,11,000/-ம் எனக்கு கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எனக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை. அதேபோல் 23.11.2021 தேதியில் ரூ.48,000/-மும், 29.11.2021 தேதியில் ரூ.1,05,000/-மும் ஆக ரூ.1,98,000/-ம் எனக்கு பிரதிவாதியின் கணவர் சீட்டு பணத்தை செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை.

5) கிரைய ஒப்பந்தத்தில் 6 மாத காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அதன் தேதி ஞாபகத்தில் இல்லை. அந்த அறிவிப்பு 20.04.2004 அன்று அனுப்பப்பட்டது என்றால் சரிதான். ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடு முடிந்து ஒரு வருடம் கழித்து அறிவிப்பு வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ள நான் தயாராக இருந்திருந்தால் ஒப்பந்தத்தில் உள்ள காலக்கெடு முடிவதற்கு முன்னரே நான் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அதிலிருந்தே நான் பொய்யான சங்கதிகளைக் கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது என்று சொன்னால் சரியல்ல.

6) அறிவிப்பினை பெற்றுக்கொண்டு பிரதிவாதியின் கணவர் என்னை பார்த்துக் கேட்டதற்கு நான் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னதால் பிரதிவாதி தரப்பில் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா இடமானது பிரதிவாதி கழிவறைக்கட்டி குடியிருந்து வரும் குடியிருப்பு பகுதி என்றாலும், அதனை கிரைய ஒப்பந்தம் போடவில்லை என்றாலும் சரியல்ல. தாவாயிடம் காலிமனையாகத்தான் உள்ளது. தாவா இடமானது குடியிருப்பு பகுதி என்பதால் பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தற்போதும், நான் கட்டிய சீட்டு பணத்தை அசல் வட்டியுடன் செலுத்த தயாராக உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு

பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :** இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.10.28 19:13:21 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**